RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-112 | 29 ஏப்ரல் | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5




இந்திய ரயில்வே 'ஒருநிலையம் ஒருபொருள் என்ற திட்டத்தின் கீழ் மதுரை ஜங்ஷன் ரயில் நிலையத்தில் புதிய இளநீர் கடை ஒன்றை தொடங்கி வைத்துள்ளது. இந்த திட்டம் உள்ளூர் தயாரிப்புகளை ஊக்குவித்து, சிறு வணிகர்களுக்கு ஆதரவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பயணிகள் இப்போது ரயில் நிலையத்திலேயே இனிப்பான, இயற்கையான இளநீர் பானத்தை ருசிக்க முடியும், இது ஆரோக்கியமான மற்றும் உன்னதமான பயண அனுபவத்தை வழங்குகின்றது.

## புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் முதலாம் ஆண்டு மைக்கேல் பிரீமியர் லீக் 2025 கிரிக்கெட் போட்டி

காளையார் கோவில் ஏப்.29

புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் முதலாம் ஆண்டு மைக்கேல் பிரீமியர் லீக் 2025 கிரிக்கெட் போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.







சிவகங்கை KTR குரூப் ஆப் கம்பெனிகளின் உரிமையாளர் தங்கராஜ் முதல் மூன்று பரிசுகளையும் வெற்றிக் கோப்பை மற்றும் பதக்கங்களையும் வழங்கி தலைமையேற்று சிறப்பித்தார். கோலிஸ்பிரிட் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியின் மாணவர்கள் முதலிடத்தையும், சிவகங்கை புனித மைக்கேல் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியின் மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் ,காளையார் கோவில் புனித மைக்கேல் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியின் மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

சிறந்த ஆட்டக்காரருக்கான சிறப்பு பரிசை, கதிர் கார்ஸ் உரிமையாளர் மாரிச்சாமி, ஊக்கத் தொகையை KTR குரூப் ஆப் கம்பெனிகளின் உரிமையாளர் ரி. தங்கராஜ் வழங்க, கோலிஸ்பிரிட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் மாணவர் சரவணன் பெற்றார்.

சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளின் மாணவர்கள் போட்டிகளில் கலந்துகொண்டு, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வினை புனித மைக்கேல் மெட்ரிக்மேல்நிலைப் பள்ளியின் சேர்மன் ஸ்டாலின் ஆரோக்கியராஜ் மற்றும் CEO பிரிஜித் நிர்மலா, நிர்வாகத்தில் பணியாற்றும் முதல்வர்கள், துணை முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கண்ணாபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு சேவார்த்திகள் இளைப்பாறும் மண்டபத்தை திறந்து வைத்த அமைச்சர்



திருப்பூர், ஏப்.29

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கண்ணாபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.15.40 இலட்சம் மதிப்பீட்டில் சேவார்த்திகள் இளைப்பாறும் மண்டபத்தை திறந்து வைத்தார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், பச்சாபாளையம் ஊராட்சி. கண்ணாபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ரூ.15.40 இலட்சம் மதிப்பீட்டில் சேவார்த்திகள் இளைப்பாறும் மண்டபத்தை திறந்து வைத்தார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப்பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம் கண்ணாபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு சேவார்த்திகள் இளைப்பாறும் மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு/பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு/ தொழிற்கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து வரும் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் சார்பில் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், பச்சாபாளையம் ஊராட்சி. கண்ணாபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ரூ.15.40 இலட்சம் மதிப்பீட்டில் சேவார்த்திகள் இளைப்பாறும் மண்டபத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், காங்கேயம் வட்டாட்சியர் மோகனன், கண்ணாபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் செயல் அலுவலர் சு.இராமநாதன் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 'தமிழகத்தில் எக்காரணம் கொண்டும் மதவாதம் நுழையாது' முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை: ஏப் 29



"காஷ்மீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் தமிழ்நாடு நிச்சயமாக உறுதுணையாக இருக்கும் என்றுதான் நாங்கள் கூறியிருக்கிறோம். எனவே, எந்த காரணத்தைக் கொண்டு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மதவாதம் உள்ளே நுழைய முடியாது" என்று பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: "உறுப்பினர் வானதி சீனிவாசன் உரை யாற்றியபோது ஆடிட்டர் ரமேஷ் தொடர்பான கொலை பற்றிக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அந்தக் கொலை என்பது அதிமுக ஆட்சிக்காலத்தில் நடந்தது. அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதேபோன்று, காஷ்மீரில் நிகழ்ந்தது போன்று நடக்கக்கூடாது என்று இங்கே பேசியிருக்கிறார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதுபோன்று நிச்சயமாக நடைபெறவே நடைபெறாது என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். காஷ்மீரில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக பேசும்போதுகூட, மத்திய அரசினுடைய பாதுகாப்பு குறைபாடு பற்றி இதுவரை நாங்கள் பேசவில்லை.

அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், நான் தெளிவாகக் குறிப்பிட்டது என்னவென்று கேட்டால், காஷ்மீர் தொடர்பான பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசு எடுக்கக்கூடிய எந்த நடவடிக்கையாக இருந்தாலும், தமிழ்நாடு நிச்சயமாக உறுதுணையாக இருக்கும் என்றுதான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். எனவே, எந்தக் காரணத்தைக்கொண்டும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மதவாதம், உள்ளே நுழைய முடியாது, என்பதை நான் தெளிவோடு சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டை developed nation உடன் ஒப்பீடு செய்ய வேண்டுமென்று பேசினார். அதற்காக உறுப்பினர் வானதி சீனிவாசனுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது பாராட்டுக்கு நன்றி. அதே நேரத்தில், நமது தமிழக அரசுக்கு மத்திய அரசினுடைய நிதி வராமல் இருக்கின்ற செய்தி உங்களுக்குத் தெரியும். இது developed nation அளவிற்கு ஒப்பிட வேண்டுமென்று சொன்னால், இன்னும் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாங்கள் காத்திருக்கிறோம், தயாராக இருக்கிறோம்.

எனவே, நீங்கள் தயவுசெய்து உங்கள் தலைமையிடத்திலே சொல்லி, அந்த நிதியைப் பெற்றுத் தருவதற்கான குரலைக் கொடுக்க வேண்டும் தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு வரவேண்டிய நிதி என்ன ஆனது? அதற்காக எவ்வளவோ குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான், நிதி கொடுக்கப்படும் என்று மத்திய அமைச்சரே இங்கு வந்து சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்.

நாடாளுமன்றத்திலும் இதற்காக நாங்கள் குரல் கொடுத்திருக்கின்றோம். அதற்காக வெளியிலே வந்து போராட்டமே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இதே சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டும் அனுப்பியிருக்கிறோம். இதெல்லாம் உறுப்பினர் வானதி சீனிவாசனுக்குத் தெரியாதா? எனவே, இப்பொழுதாவது இதுகுறித்துப் பேசிய காரணத்தாலே, நிதியைப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் உரிமையோடு குரல் கொடுத்து அதைப் பெற்றுத்தர வேண்டும்," என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## மதுரை சித்திரைப் பெருவிழா2025 முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம்

மதுரை: ஏப் 29



மதுரை சித்திரைப் பெருவிழா2025 முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்ததாவது:

மதுரை சித்திரைப் பெருவிழா 2025க்கான முன்னேற்பாடு பணிகள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம், அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளல் ஆகியவை முக்கிய நிகழ்வுகளாக திகழ்கின்றன. இப்பெருவிழாவில் 10 லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் பொதுமக்கள் பங்கேற்பார்கள். அதன்படி போதிய முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எந்த அளவிற்கு சிறப்பாக மேற்கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு சிறப்பாக செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்கனவே பல கூட்டங்கள் நடைபெற்ற பிறகும் கடந்த ஆண்டுகளில் மேற்கொண்ட முன்னேற்பாடு பணிகளை விட இந்தாண்டு கூடுதல் கவனத்துடன் முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்ததாவது:

கடந்த வருடம் போன்று இந்த வருடமும் சித்திரைப் பெருவிழா சிறப்பாக நடைபெறும். குறிப்பாக அழகர்கோவிலில் இருந்து கள்ளழகர் வரும் வழிகளில் உள்ள மண்டகப்படிகளில் கள்ளழகர் குறித்த நேரத்தில் வருவதையும், புறப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். மேலும் பல ஊர்களிலிருந்து வருகைபுரியும் பக்தர்கள் அதிக அளவில் கூடுவதற்கு வாய்புள்ளதால் பல்வேறு இடங்களில் கோயில் நிர்வாகம் சார்பாக பெரிய எல்.இ.டி திரைகள் அமைக்கப்பட வேண்டும். பக்தர்கள் வந்து செல்லும் வழிகளில் தடுப்புகள் உறுதியானதாக அமைக்கப்பட வேண்டும் என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள. சங்கீதா மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்-செய்தித்துறை பி.ஆர்.ஓ கவனத்திற்கு

வேலூர் ஏப்29

வேலூர் மாவட்டத்தில், பிரஸ் ஸ்டிக்கர்கள் போட்டு அதிகப்படியான நபர்கள் எந்த செய்தி புத்தகம் மற்றும் பேப்பரிலும் இல்லாமல் பிரஸ் என்று போட்டுக் கொண்டு, வாகனங்களில் காப்பீடு இல்லாமல் மற்றும் உரிய ஆவணங்கள் இல்லாமல் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதும், பிரஸ் என்ற ஸ்டிக்கரை வைத்து தவறாக மிஸ் யூஸ் செய்து வருவதாக புகார்கள் அதிகரித்து வருகிறது. இத்துடன் நான் செய்தியாளர் என்று பல இடங்களில் முறைகேடாக அரசு ஊழியர்களை மிரட்டி பணம் வசூல் செய்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட இவர்களால் பெரிதாக மிரட்டலுக்குள்ளானவர்களின் புகார்கள் வலுக்கினறது. இதனை முறைகேடாக பல விதங்களில் திரித்து தர்ம சங்கடத்திற்கு உள்ளாக்கப்படுவதாகவும் அதிகப்படியான பணத்தை முடிஞ்ச அளவுக்கு மிரட்டி அநீதியாக சுயநலத்திற்கு சட்டத்திற்கு புறம்பாகவும், பத்திரிகை தர்மத்திற்கு எதிராகவும், அடிக்கடி பணம் பறிப்பதும், வேண்டுமென்று காழ்ப்புணர்ச்சியில் உண்மைக்கு மாறான சில விஷயங்களைக் கூறி செய்தியாக்கிவிடுவேன், செய்தி போடுவேன் என மிரட்டுவதும் அதிகரித்து வருவதாக தெரிவித்து வருகின்றனர். எனவே துரிதமாக ஒவ்வொரு நிறுவனத்தின் நெடும் ஆய்வு மேற்கொண்டு ஐடி கார்டு மற்றும் கடிதங்களை சரிபார்த்து சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் வருடம் தொலைபேசி மற்றும் நேரில் அழைப்பு விடுத்து வரவைத்து உண்மை நிலையை அறிந்து உண்மை நிலைக்கு மாறாக போலியாக செயல்படும் நபர்கள் மீது கடுமையான சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரஸ் என்று ஸ்டிக்கரை பயன்படுத்தும் வாகனத்தை பறிமுதல் செய்யவும், பத்திரிகையாளர்கள் சங்கத்தின் சார்பாக கோரிக்கைகள் வைத்துள்ளனர். இதுகுறித்து கடந்த மூன்று ஆண்டுகளாகவே இந்த கோரிக்கை வைத்து வந்த நிலையில் இதுவரை இந்த ஆய்வை துரிதமாக மேற்கொண்டு களை எடுக்க வேண்டும் என பத்திரிகையாளர்கள் சங்கத்தின் சார்பாகவும் பத்திரிகை ஆசிரியர்கள் உதவி ஆசிரியர்கள் செய்தியாளர்கள் சார்பாகவும் கேட்டுக் கொள்கின்றோம்.

## திமுக நிர்வாகி வெட்டி படுகொலை! 3 பேரிடம் காவல்துறையினர் விசாரணை

சிவகங்கை ஏப்.29

சிவகங்கை மாவட்டம் சாமியார்பட்டி வெள்ளஞ்சி கண்மாய் அருகில் இளைஞர் ஒருவரை மூன்று நபர்கள் வெட்டி விட்டு அங்கிருந்து தப்பி சென்றதாக காவல்துறையினருக்கு கிடைத்த தகவலின்பேரில் சம்பவ இடம் விரைந்தனர்.

சம்பவ இடத்தில் வெட்டு காயங்களுடன் இருந்த நபர் சாமியார்பட்டியை சேர்ந்த முத்துகிருஷ்ணன் மகன் பிரவின் என்பதும் இவர் திமுக மாவட்ட திமுக மாணவரணி இணை அமைப்பாளர் என்பதும் அடையாளம் கண்டு, அவரை உடனடியாக அங்கிருந்து மீட்டு சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட பிரவீன் வழியில் இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்ததன் பேரில் அவரது பிரேதம் மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டது.

உடனடியாக சிவகங்கை மாவட்ட துணை கண்காணிப்பாளர் தலைமையில் மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளிகளை தேடி வந்தனர்.

டூவீலரில் வந்த மூன்று நபர்கள் மீது தொடர்பாக காவல்துறையினர் தீவிர விசாரணை செய்து சாமியார்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகள் முழுவதும் தேடி வந்த நிலையில் 3 எதிரிகளும் ஒரு டூவீலரில் வாளுடன் செல்வதை கண்டு போலீசார் மேற்படி நபர்களை துரத்தி பிடித்தனர்.

மேற்படி பிடிபட்ட எதிரிகள் குறித்து விசாரணை செய்தபோது சிவகங்கை மாவட்டம் சாமியார் பட்டியைச் சேர்ந்த கருப்பையா மகன் விக்கி என்ற கருணாகரன்(20), சிவகங்கை காளவாசல் பகுதியைச் சேர்ந்த செல்வராஜ் மகன் பிரபாகரன்(19)மற்றும் திருப்பத்தூர் நரசிங்கபுரத்தைச் சேர்ந்த சூரியமூர்த்தி மகன் குரு(21) ஆகியோர் மேற்படி கொலை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது தெரிய வந்தது.

மேலும் இக்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை செய்ததில் ,

இறந்த நபரும் மேற்படி எதிரி விக்கி என்ற கருணாகரனும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதும், விக்கி என்ற கருணாகரனின் தம்பி, தனுஸ்ராஜா கடந்த ஏப்ரல் 17ஆம் தேதி அதே கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை கையால் தாக்கியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது. இந்நிலையில் மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டதற்கு அப்பெண்ணின் உறவினரான பிரவீன் தான் தூண்டுதல் செய்துள்ளார் என எண்ணிய தனுஷ் ராஜாவின் சகோதரர் விக்கி என்ற கருணாகரன் அவரது நண்பர்களுடன் மேற்படி பிரவினை வாளால் வெட்டி கொலை செய்துள்ளார்.

மேற்படி மூன்று எதிரிகளும் கைது செய்யப்பட்டு, அவர்களிடம் இருந்து மூன்று வாள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் சம்பவத்திற்கு பயன்படுத்தப் பட்ட டூவீலரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. போலீசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

## மதுரை மருத்துவக் கல்லூரியில் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு மருத்துவ கல்லூரிகளுக்கு இடையே நடை பெறும் விழா வியுஹா 25 - மதுரா''25




மதுரை: ஏப் 29

மதுரை மருத்துவக் கல்லூரியில் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட வியுஹா''25 மற்றும் மதுரா''25 என்னும் மருத்துவக் கல்லூரிகளுக்கு இடையேயான பண்பாட்டு மற்றும் விளையாட்டு விழா 23.04.2025 அன்று சிறப்பாகத் துவங்கியது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறும் இவ்விழா 23.04.2025 முதல் 27.04.2025 வரை வரலாற்றுச் சிறப்பு மிக்க மதுரை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் பேரா.மரு.லெ.அருள் சுந்தரேஷ் குமார், மதுரை மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மரு.சி.மல்லிகா, பெண்கள் விடுதி முதுநிலை காப்பாளர் பேரா.மரு.செல்வராணி, மாணவர் பணியாளர் ஆலோசகர் பேரா. மரு.வி.தனலட்சுமி, தடகள சங்க துணைத்தலைவர் பேரா.மரு.அழகுவடிவேல், விளையாட்டு ஆலோசகர்கள் மரு.முத்துக்குமார் மற்றும் மரு.ஜெகதீஷ்குமார் ஆகியோர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் உற்சாகமான போட்டிகள் மற்றும் ஒற்றுமை உணர்வுடன் மதுரை மருத்துவக் கல்லூரியின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாக வியுஹா''25 மற்றும் மதுரா''25 திகழ்கிறது.

கலாச்சாரம் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் வெ மாணவர்களுக்கு விருதுகள் மற்றும் கோப்பைகள் விழாவின் 2 3/4 ஏப்ரல் 27 மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் வழங்கப்பட்டது.

மதுரை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் மரு. அருள் சுந்தரேஷ்குமார் தமிழ்நாடு மருத்துவ சங்க மாநில தலைவர் மரு.திரு. செந்தில் உள்ளிட்ட 10 பிரமுகர்கள் தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் மதுரை மருத்துவக் கல்லூரி முதல் பரிசினைத் தட்டி சென்றது. வியூகாவில் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி வெற்றி கோப்பையைத் தட்டி சென்றது. இரண்டாம் இடத்தை விருதுநகர் மருத்துவக் கல்லூரி பெற்றது குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்விழாவில் மிர்ணாளினி ரவி, காயத்திரி சங்கர் போன்ற பல பிரபலங்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ள அரியாண்டிபுரம் கிராமத்தில் மக்கள் போராளி தோழர் புலி பாண்டியன் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் அனுசரிக்கப்பட்டது. தியாகி இமானுவேல் பேரவை சார்பில் கருஞ்சட்டை பேரணி மற்றும் நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது தியாகி இமானுவேல் பேரவையின் மாநில மாவட்ட ஒன்றிய பொறுப்பாளர்கள் ஜனநாயக சக்திகள் கலந்து கொண்டனர்.

## சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோயிலில் சித்திரை தெப்ப திருவிழாவை யொட்டி மஞ்சள் வாங்கும் நிகழ்ச்சி

கன்னியாகுமரி, ஏப்.29



கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோயிலில் சித்திரை தெப்ப திருவிழாவை யொட்டி மஞ்சள் வாங்கும் நிகழ்ச்சி நடந்தது. வரும் 28ம் தேதி கொடியேற்றத்துடன் விழா துவங்குகிறது.

சித்திரை சபை மண்டபத்தில் வைத்து நடராஜ மூர்த்திக்கு சிறப்பு பூஜைகள் செய்த பிறகு 18 ஊர் பிடாகைகள், ஊர் தலைவர்கள் வட்ட பள்ளி மடம் ஸ்தானிகர் டாக்டர் சிவபிரசாத், தெற்கு மண் மடம் ஸ்தானிகர் ஆதிசேஷன் நம்பூதிரி தலைமையில்,

குமரி மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் பிரபா ஜி ராமகிருஷ்ணன், இணை ஆணையர் பழனிதுளசி தரன் நாயர், ராஜேஷ், சுந்தரி அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சுசீந்திரம் பேரூராட்சி தலைவர் அனுஷியா, கோயில் மேலாளர் ஆறுமுகதரன், கணக்காளர் கண்ணன் மற்றும் பக்தர்கள் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு திருவிழாவுக்கான பத்திரிகைக்கு மஞ்சள் வாங்கும் நிகழ்ச்சி நடந்தது.

விழாவில் 9 ம் நாள் திருவிழாவான, மே மாதம் 6 ம் தேதி காலை 9 மணிக்கு தேரோட்டம் நடக்கிறது. விழா வின் நிறைவு நாளான மே 7 ம் தேதி இரவு 8 மணிக்கு தெப்பத் திருவிழா நடைபெறுகிறது. நள்ளிரவு 12 மணிக்கு ஆராட்டு டன் விழா நிறைவு பெறுகிறது. விழா ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர், அறங்காவலர் குழுவினர், பக்தர்களும் இணைந்து செய்தனர்.

## தமிழகத்தில் முதன்முறையாக நீலகிரியில் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் ட்ரோன்கள்

குன்னூர், ஏப்.27



நீலகிரி மாவட்டத்தில் தேயிலை மற்றும் மலை தோட்ட காய்கறி விவசாயங்கள் தான் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இது தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக அதிநவீன இயந்திரங்களை பயன்படுத்துவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் தேயிலை தோட்டங்களில் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக அதிநவீன தேயிலை பறிக்கும் இயந்திரங்கள் மட்டுமல்லாமல், மோட்டார்கள் மூலம் குறைந்த தொழிலாளர்களை வைத்து மருந்து தெளிக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தமிழகத்திலேயே முதல் முறையாக ட்ரோன்கள் மூலம் தேயிலை தோட்டங்களில் மருந்து தெளிக்கும் பணி குன்னூர் அருகே உள்ள கொலக்கம்பை பகுதியில் உள்ள தனியார் தேயிலை தோட்டத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. ஆந்திராவிலிருந்து வரவழைக்கப்பட்ட ட்ரோன்களில் 10 லிட்டர் மருந்து நிரப்பி ஒரு மணி நேரத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் மருந்து தெளிக்கப்படுகிறது.

இதன் மூலம் தொழிலாளர் பற்றாக்குறையை தவிர்க்க இயலும் என இந்த தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதனை அருகே உள்ள நேரில் வந்து பார்வையிட்டு தங்களது தோட்டங்களில் பயன்படுத்த முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.




சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைப்பெற்ற அனைத்து கட்சிகள் கூட்டத்தில் ஊடக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கலந்து கொள்ளப்பட்டது. இந்த கூட்டத்தில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மூத்த கட்சி தலைவர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகள் நடைபெற்றது.



கன்னியாகுமரியிலிருந்து வட்டக் கோட்டைக்கு பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் சொகுசு படகு சேவையை மீண்டும் தொடங்கியுள்ளது. 75 பயணிகளை ஏற்றிச் செல்லும் இந்த குளிரூட்டப்பட்ட படகு, ஒரு மணி நேர கடல் பயணத்தை வழங்குகிறது. 18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க வட்டக் கோட்டையை ரசிக்கலாம். ஒரு நபருக்கு ரூ.450 கட்டணத்தில், கடல் அழகையும், பழமையான கோட்டையையும் அனுபவிக்கலாம். சுற்றுலாப் பயணிகளுக்கு இது ஒரு அற்புத அனுபவமாக அமையும்!

## தாம்பரத்தில் மாநில அளவிலான இருபால் குத்துச்சண்டை போட்டி

தாம்பரம், ஏப்.27



தாம்பரத்தில் தமிழக முதலமைச்சர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் முன்னிட்டு தாம்பரம் மாநகர இளைஞரணி சார்பில் மாநில அளவிலான இருபால் குத்துச்சண்டை போட்டியை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா துவக்கி வைத்தார்

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த சேலையூர் அரசு பள்ளியில் மைதானத்தில் தமிழக முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற 5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் தலைமையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்திக் ஏற்பாட்டில் இரண்டு நாள் மாநில அளவிலான இருபால் குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஆண்கள் பெண்கள் என இருபால் 400க்கும் மேற்பட்டோர் போட்டியில் கலந்து கொண்டு விளையாடுகின்றனர்.

இந்த போட்டியில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா கலந்து கொண்டு போட்டியினை துவக்கி வைத்தார். இந்த போட்டி விழாவில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், பகுதி செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் எனப்படும் டிஎன்பிஎஸ்சி பல்வேறு அரசு பணிகளுக்கான தேர்வுகளை நடத்தி வருகிறது. குரூப் 4 தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் வரும் ஜூலை 12 ஆம் தேதி தேர்வு நடத்தப்படும் என்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ளது. மொத்தம் 3935 காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குரூப் 4 தேர்வில் ஜூனியர் உதவியாளர் (பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு அல்லாத) பில் கலெக்டர் தட்டச்சு செய்பவர், ஸ்டெனோ டைப்பிஸ்ட், கிரேடு 3 கள ஆய்வாளர், வரைவாளர் உள்ளிட்ட பணிகளுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பூக்கொல்லையில் இதற்கான பயிற்சி மையம் தற்போது செயல்பட்டு வருகிறது இதில் இலவசமாக (5நபர்களுக்கு) மட்டும் பயில சிறப்பு நுழைவு தேர்வு நடத்தப்படும் தேர்வில் எடுக்கும் மதிப்பின் பொருட்டு அனுமதி உண்டு மேலும் சேர்க்கை அதிகரிக்கும் பொருட்டு பயிற்சி கட்டணத்திலிருந்து 50% மானியமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறந்த விளையாட்டு பயிற்சியாளருக்கான விருது வென்ற மானாமதுரை டிராகன் ஸ்போர்ட்ஸ் கிளப் பயிற்சியாளர்






மானாமதுரை, ஏப்.27

கோயம்புத்தூரில் உள்ள 'கோஇந்தியா ஆடிட்டோரியத்தில்' "வாகை விருதுகள் 2025" என்ற விழா நடைபெற்றது. இவ்விழாவில் "2025 ஆம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு பயிற்சியாளருக்கான விருது" கலந்து கொண்ட சிவகங்கை மாவட்டம் மானாமதுரையை சேர்ந்த "டிராகன் ஸ்போர்ட்ஸ் கிளப்" பயிற்சியாளர் கே. தமிழ்ச்செல்வனுக்கு வழங்கப்பட்டது. மேலும் தமிழ்ச்செல்வனின் பணி மென்மேலும் சிறக்க வாகை விருதுகள் 2025 சார்பாக தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். சிறந்த பயிற்சியாளருக்கான விருதை பெற்று ஊர் திரும்பிய தமிழ்ச்செல்வனுக்கு கட்சியினர், ஊர் பொதுமக்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். விருது பெற்ற தமிழ்ச்செல்வன் மானாமதுரையில் இயங்கி வரும் தமிழ் மைந்தன் ஐஏஎஸ் அகாடமி நிறுவனராகவும், இலக்கிய ஆசிரியராகவும், கல்வி மற்றும் விளையாட்டு சேவைகளுக்காக பல்வேறு விருதுகள் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பள்ளி கல்வித்துறை சார்பில் சிவகங்கையில் குத்துசண்டை பயிற்சி முகாம்

சிவகங்கை, ஏப்.27





சிவகங்கை மாவட்ட அரசு பள்ளிகளிலுள்ள உடற்கல்வி ஆசிரியர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு குத்துசண்டை விளையாட்டு போட்டியின் நுணுக்கங்களையும், மாணவர்களை எவ்வாறு ஊக்கப்படுத்தி பயிற்சிக்கு உட்படுத்தவது, உடல் திறன்மேம்பாடு, மற்றும் நடுவர்களின் விதிமுறைகள், போன்ற பல்வேறு வகையான சிறப்பு பயிற்சி வகுப்புகள் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் முழுவதும் வழங்கப்பட்டது, இந்த பயிற்சி முகாம்" ஏப்ரல் 25"அன்று மாவட்ட விளையாட்டு மையமான, ஃபயர்ஸ்டோர்ம் ஃபயிட் கிளப் குத்துசண்டை பயிற்சி நிலையத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது, கிளப் நிறுவனர் மற்றும் சிவகங்கை மாவட்ட குத்துசண்டை பயிற்சியாளர் ச. குணசீலன் மற்றும் விழுப்புரம் மாவட்ட சிறப்பு NIS பயிற்சியாளர் பாலமுருகன் மற்றும் பயிற்சியாளர் சித்ரா ஆகியோரால் வகுப்புகள் எடுக்கப்பட்டது. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் ச. கார்த்திகேயன் தலைமை வகித்து முகாமை சிறப்புடன் தொடங்கி வைத்தார்.

இதில் 20 அரசு பள்ளி உடற்கல்வி ஆசிரியர்கள் மிக ஆர்வமுடன் கலந்து கொண்டனர். முடிவில் முகாமில் சிறப்புடன் பங்காற்றிய மாநில மற்றும் மண்டல அளவில் குத்துசண்டையில் சாதனை புரிந்த மாணவர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் பள்ளி கல்வித்துறை சார்பில் பாராட்டு சான்றிதல்கள் வழங்கபட்டது.


இந்த பயிற்சி முகாம் பயனுள்ளதாக இருந்ததாகவும். உடற்கல்வி ஆசிரியர்களை மேன்படுத்துவதன் மூலமே மாணவர்கள் மேன்பட முடியும் என்பதே இந்த பயிற்சி முகாமின் நோக்கம் என்று உடற்கல்வி ஆய்வாளர் ச.கார்த்திகேயன் தெரிவித்தார்.

## சிவகங்கை ஆதனூர் கிராமத்தில் மாபெரும் கிரிக்கெட் போட்டி







சிவகங்கை, ஏப்.29

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் ஆதனூர் கிராமத்தில் ஆதனூர் மதகு அணை அருகே ரயில்வே காலனிசேவை கரங்கள் மற்றும் பிரண்ட்ஸ் கிளிப் ஆர் சி சி லவ்லி பிரெண்ட்ஸ் ரயில்வே காலனி அன்பு நண்பர்கள் இணைந்து நடத்திய 11ஆம் ஆண்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் ஆர் சி சி அணி முதல் பரிசை தட்டி சென்றது. சந்துரு ராயல் மெமோரியல் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி இரண்டாம் பரிசை தட்டி சென்றது. இளம்புயல் அணி மூன்றாம் பரிசை தட்டி சென்றது. நான்காம் பரிசை துவம்மாள் அணி தட்டி சென்றது. சிறப்பு பரிசு 25,001 தொகையை 26 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் செல்வம் எ அழகர்சாமி திமுக நிர்வாகிகள் செல்லப்பாண்டி, சங்கர் கணேஷ், ராஜேந்திரன், தர்மா ஆகியோர் வழங்கினர். முதல் பரிசு 20,001யை மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி வழங்கினார்.

இரண்டாம் பரிசு 15,001யை வழங்கியவர் நகர மன்ற துணைத் தலைவர் பாலசுந்தரம் , அஇஅதிமுக முன்னாள் கவுன்சிலர் கோட்டைமுத்து, அதியமான் பொன்னுச்சாமி, 10,001 மூன்றாம் பரிசு வழங்கியவர்கள் தனபாலன், முரளி, பில்லத்தி மூர்த்தி, நான்காம் பரிசு 5,001 வழங்கியவர்கள் அஇஅதிமுக மானாமதுரை 15வது நகர் மன்ற உறுப்பினர் தெய்வேந்திரன், மனோஜ் குமார் ஆகியோர் வழங்கினார்.

## வேலூர் மாவட்ட தென்னிந்திய பத்திரிகையாளர் சங்க கூட்டமைப்பு ஆலோசனை கூட்டம்



வேலூர் ஏப்29

வேலூர் மாவட்டம், வேலூரில், ஹோட்டல் அமிர்தா ஹோட்டலில், தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் ஒருங்கிணைந்த மாவட்ட தலைவர் டாக்டர். ராஜ்பாபு தலைமையில், துணைச் செயலாளர்கள் முஜீப் ரகுமான், டைமண்ட். கெஜராஜ் முன்னிலையில், கூட்டமைப்பு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

பத்திரிக்கையாளர்களின் நலநிற்காக மாநில அளவிலான ஆந்திர பிரதேச பணிப் பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு ஆலோசனை கூட்டம், சிறப்பு விருந்தினர் களுக்கு, ஆந்திர பிரதேஷ் வொர்கிங் ஜர்னலிஸ்ட் ஃபெடரேஷன், (APWJF) சித்தூர் மாவட்ட தலைவர் பி. பிரகாஷ், எலக்ட்ரானிக் மீடியா செயலாளர் சின்னா, துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு இந்த கூட்டம் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது மூத்த பத்திரிகையாளர்கள் முருகானந்தம், எழிலரசன், துரைராஜ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு பத்திரிகையாளர்களுக்கு வரும் நெருக்கடிகளை சமாளிப்பதும், சட்டரீதியாக அதற்கு உண்டான தீர்வு காண்பது குறித்தும் தீர்மானிக்கப்பட்டு இந்த கூட்டமைப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

## சிவகங்கை மாவட்டத்தில் மே தினத்தை முன்னிட்டு மதுக்கடை மூடல்!

சிவகங்கை ஏப்.29

சிவகங்கை மாவட்டம் 01.05.2025 அன்று மே தினத்தை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மதுபானக்கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்கள்

அனைத்தும் முழுவதுமாக மூடப்படும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

வருகின்ற 01.05.2025 அன்று மே தினத்தை முன்னிட்டு, டாஸ்மாக் அரசு மதுபான கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்கள், FL1, FL2, FL3, FL3A, FL3AA, F11A உரிமம் பெற்ற ஹோட்டல்கள், கிளப் மற்றும் மனமகிழ் மன்றங்கள் வருகின்ற 01.05.2025 அன்று முழுவதுமாக மூட தமிழக அரசு ஆணை யிடப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மதுபானக்கடைகள், திலி1 மற்றும் திலி2, திலி3 மதுக்கூடங்கள் மே தினத்தை முன்னிட்டு வருகின்ற 01.05.2025 அன்று மட்டும் முழுவதுமாக மூடப்படும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் - மின்மாற்றி திறப்பு விழா



செம்பாக்கம் ஏப்.28

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் செம்பாக்கம் தெற்கு பகுதி சிட்லபாக்கம் 43வது வட்டத்தில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (R.O.PLANT) மற்றும் புதிய மின்மாற்றி (TRANSFORM-ER)* ஆகியவற்றை தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் இந்நிகழ்ச்சியில் செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் சி.ஜெகன், சி.சுரேஷ், இரா.ராஜா பொதுக்குழு உறுப்பினர் க.தேவேந்திரன், பகுதி அவைத்தலைவர் க.ராமசந்திரன், மாநகர அமைப்பாளர்கள் இ.மனோகரன், இரா.விஜயகுமார், மாநகர பிரதிநிதி ம.வெங்கடசாமி, பேரூர் கழக மு.செயலாளர் ஜி.எஸ்.விஜயபாரதி வட்ட செயலாளர் ஆர்.சதீஷ்குமார், மாநகர அணிகளின் நிர்வாகிகள் பா.பிரதாப், சி.பரிமளா, இ.வி.சுரேஷ், மு.பாரதிதாசன், எம்.ஆர். ராமசந்திரன், வட்ட கழக நிர்வாகிகள் ச.ஜெகனாதன், ஆர்.கே.புரம் சிவா, ந.பாஸ்கர், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் கே.பி.பி. லட்சுமணன், கழக நிர்வாகிகள் குடியிருப்போர் நலசங்க நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

## கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு



கன்னியாகுமரி ஏப்29

கன்னியாகுமரி மாவட்ட தோவாளை வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு துறை வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சார்ந்த ஆர்.அழகுமீனா. செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்.

கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பிரசவ முன்கவனிப்பு பகுதி, பின்கவனிப்பு பகுதி ஆகியவற்றை ஆய்வு செய்து அங்கு தாய்மார்களிடம் வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறியப்பட்டது. மருத்துவமனையில் வளமிகு வட்டார திட்டத்தின் கீழ் பிரசவ வார்டு பகுதியில் தாய்மார்களுக்கும் அவர்களுடன் துணைக்கு இருப்பவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இம்மருத்துவமனையில் புதிதாக அமையவுள்ள அறுவை அரங்கிற்கான ஆயத்த பணிகள் குறித்து மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கேட்டறிப்பட்டது.

மேலும் செவிலியர்கள் மற்றும் மருத்துவர்களிடம் இம்மருத்துவமனையை நாடி வரும் கர்பிணிப்பெண்களுக்கு சிறப்பான சிகிச்சையளிக்க வேண்டும் எனவும். கர்பிணிப்பெண்கள் மற்றும் உடன் இருப்போரிடம் கனிவுடன் நடந்துகொள்ளவேண்டும் எனவும், இங்கு நடைபெறும் பிரசலங்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் எனவும். ஆபத்து அறிகுறி காணப்படும் கர்ப்பிணி தாய்மார்களை பிரசவ தேதிக்கு முன்பாகவே மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும் எனவும். பிரசவித்த தாய்மார்களுடன் துணைக்கு இருக்கும் ஒருநபருக்கு மருத்துவமனை உணவு வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து இறச்சகுளம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இறச்சகுளம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் 11 உறுப்பினர்கள் 170 லிட்டர் பால் வழங்கி வருகிறார்கள். சங்கத்தின் பால் உற்பத்தியை அதிகரித்து ஆவினுக்கு அதிக அளவில் பால் வழங்கவும். பால் உபபொருட்கள் விற்பனை செய்யவும். உறுப்பினர்களுக்கு தேவையான கறவை மாட்டுக் கடன்கள் பெற்று வழங்கவும், மாட்டுத்தீவனம் மற்றும் தாது உப்பு கலவை தட்டுப்பாடின்றி வழங்கவும் கூட்டுறவு சங்க செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து உறுப்பினர்களுக்கு தேவையான கடன் வசதி மற்றும் இடுபொருள்களுக்கான தேவையினை பூர்த்தி செய்து பால் உற்பத்தியினை அதிகரிக்குமாறு அறிவுறுத்தினார்கள். சங்கங்களிலிருந்து ஆவினுக்கு 10000 லிட்டர் பால் உடனடியாக பெறப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயித்து செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது. மேலும் அனைத்து சங்கங்களிலும் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை நிலையத்தினை உடனடியாக துவங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. கால்நடை துறை மற்றும் தர தொடர்புடைய துறைகளுடன் இணைந்து உறுப்பினர்களுக்கான சேவைகளை தங்குதடையின்றி வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் தோவாளை வட்டத்திற்குட்பட்ட வெள்ளமடம் குலசேகரன்புதூர் பகுதியில் ரூ.3.79 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, கட்டடத்தின் அடிப்படை வசதிகள் குறித்தும், உறுதித்தன்மை குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. தொடர்ந்து ஒடுத்தளத்தின் தரம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் பொதுப்பணித்துறை கட்டிடம் மற்றும் பராமரிப்பு உதவி செயற்பொறியளார் முருகேசன், நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலர் .சக்திவேல், கன்னியாகுமரி ஒன்றிய பால் கூட்டுறவு சங்க பொது மேலாளர் மகேஷ்வரி, வட்டார மருத்துவ அலுவலர், ஒன்றிய பால் கூட்டுறவு சங்க அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## பூந்தமல்லி கோலப்பஞ்சேரி பகுதியில் மாநில அளவிலான பி.எஸ்.ராவ் நினைவு விளையாட்டு விழா



கோலப்பஞ்சேரி ஏப் 27

பூந்தமல்லி கோலப்பஞ்சேரி பகுதியில் ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் மாநில அளவிலான பி.எஸ்.ராவ் நினைவு விளையாட்டு விழா நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி அருகில் உள்ள கோலப்பஞ்சேரி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் மாநில அளவிலான பி.எஸ்.ராவ் நினைவு விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது இந்த விழாவில் தமிழ்நாடு நிறுவன மேலாளர் ஹரிபாபு அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக சவிதா இன்ஜினியரிங் கல்லூரியின் விளையாட்டு மும்முனைப் பேராசிரியர் வால்வீமா ராஜா மற்றும் காவல் துணை ஆய்வாளர் தம்பிதுரை ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி சிறப்புரையாற்றி தொடங்கி வைத்தனர்

இதில் சென்னை , ஓசூர், நாமக்கல், கோயம்புத்தூர் மண்டலங்களை சேர்ந்த சைதன்யா பள்ளி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது திறமையை வெளிப்படுத்தினர்.

எல்லா மண்டலங்களின் முதல்வர்களும், விளையாட்டுத்துறை வள ஆய்வாளர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்கப்படுத்தி, விழா வெற்றிகரமாக நடைபெற உதவினர்.

பல போட்டிகள், நிகழ்ச்சிகள் மற்றும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. மாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

## இளையான்குடி அஇஅதிமுக பேரூர் சார்பில் பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்





இளையான்குடி, ஏப்.27


சிவகங்கை மாவட்டம், இளையான்குடி அஇஅதிமுக பேரூர் கழகம் சார்பில் பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம் கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க

கழக அமைப்புச் செயலாளர், சிவகங்கை மாவட்ட பூத்கமிட்டி பொறுப்பாளர் ஏ.கே. சீனிவாசன் தலைமையிலும் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். செந்தில் நாதன் முன்னிலையிலும் நடைபெற்றது.

இளையான்குடி பேரூர் கழக செயலாளர், 17வது வார்டு கவுன்சிலர் எம்.ஏ. நாகூர்மீரா நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்ச்சியில் எஸ்.நாகராஜன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஏ.சி. மாரிமுத்து மாவட்ட அம்மா பேரவை இணைச்செயலாளர், அ.பாரதிராஜன் இளையான்குடி தெற்கு ஒன்றிய செயலாளர்,

செல்வராஜ் முன்னாள் மாவட்ட கவுன்சிலர். பேரூர் கழக நிர்வாகிகள். அபுபக்கர், செய்யது இபுறாகிம், அபுல்கலாம் ஆசாத், தாவூது பாட்சா, மீரான் கனி, செய்யது அன்சாரி, கலில் அஹமது, திருநாவுக்கரசு, அயுப்கான், தாஜ்மைதீன், அப்பாஸ் அலி, சிவக்குமார், எம்.செல்வம், எல்.முருகன், அரசேந்திரன், தெய்வேந்திரன், ஆனந்தராஜ், கீழாயூர் செய்யது, மைதீன், தஸ்தகீர், ஜாவித், கோஸ்காதர், நசீம், ஹைதர் அலி, அன்சாரி, செல்வக்குமார், அலிஅக்பர், ஜெயினுதீன், சங்கன், ராஜமாணிக்கம், சந்திரா, இபுறாம்சா, பைசில் ரஹ்மான், சோலமலை மற்றும் பூத்மிட்டி நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## குன்னூர் காட்டேரி பூங்கா மலைப்பாதையில் விபத்து



குன்னூர், ஏப்.28

நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலை காட்டேரி பூங்கா பகுதியில் குன்னூர் உள்ள தேவர் சோலையில் இருந்து கோயம்புத்தூர் நோக்கி சென்ற வாடகை காரும் கோயம்புத்தூரில் இருந்து உதகை நோக்கி வந்த தனியார் காரும் நேருக்கு நேருக்கு நேர் மோதிக் கொண்டது. இந்த விபத்தில் தேவ சகாயம் (75) சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். உடனடியாக அப்பகுதிக்கு வந்த குன்னூர் நெடுஞ் சாலை ரோந்து காவல்துறையினர் தேவ சகாயத்தை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் குன்னூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் பின்பு விபத்துக்குள்ளான வாகனங்களை கிரேன் மூலம் அப்புறப்படுத்தினர் இதனால் குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.



காஷ்மீர் பஹல் காமில் சுற்றுலா பயணிகள் மீது நடந்த பயங்கரவாதிகளின் தாக்குதலில் உயிர் தியாகம் செய்தவர்களுக்கு அருவங்காடு பகுதியில் உள்ள கார்டைட் பேக்டரி லேபர் யூனியன் மற்றும் டிபன்ஸ் பேக்டரி லேபர் யூனியன் சார்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் சங்கத்தின் தலைவர் ரவி பொதுச் செயலாளர் ஹரிஹர சுப்பிரமணியன், செயல் தலைவர் ஷேக் நாசர் மற்றும். டி எப் எல் யூ சங்கத்தின் தலைவர் முகமது அன்சார் மற்றும் சி எப் எல் யூ , டி எ ப் எல் யு சங்கத்தின் நிர்வாகிகளும், தொழிலாளர்களும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.



மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் உண்டியல் திறப்பு நடைபெற்றது. இதில் திருக்கோவிலின் துணை ஆணையர்/ செயல் அலுவலர் யக்ஞ நாராயணன், மதுரை உதவி ஆணையர் வளர்மதி, ஆய்வர் சாவித்திரி திருக்கோவிலின் அறங்காவலர் குழு உறுப்பினர், செந்தில்குமார், அறங்காவலர் குழு தலைவர் பிரதிநிதி நல்லதம்பி, திருக்கோவில் கண்காணிப்பாளர், பாலமுருகன், பி ஆர் ஓ முருகன் மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் பக்தர்கள் காணிக்கையாக ரூ. 62,00,642/ ரொக்கமும் மற்றும் தங்கம் 132 கிராம், வெள்ளி 265 கிராம் ஆகியன கிடைக்க பெற்றன.

## தாம்பரம் மாநகர திமுக இளைஞரணி சார்பில் குரோம்பேட்டையில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா



குரோம்பேட்டை ஏப்28

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக இளைஞரணி சார்பில் குரோம்பேட்டையில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் குரோம்பேட்டை ஜெ.இன்சமாம் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி கலந்துகொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து தர்பூசணி மோர் இளநீர் குளிர்பானங்கள் உள்ளிட்ட பொருட்களை வாங்கினார் இந்த நிகழ்ச்சியில் மண்டல தலைவர் பகுதி கழகச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே. கருணாகரன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஏ.சத்திய பிரபு, வட்டக் கழகச் செயலாளர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

## வேலூர் வி.ஐ.டி.யில் கோடைக்கால விளையாட்டு விழா!!



வேலூர் ஏப்29

வேலூர் மாவட்டம், உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் வி.ஐ.டி.யில் 19ம் ஆண்டு கோடைகால இலவச விளையாட்டு விழாவின், சிறப்பு பயிற்சி முகாம் 26042025 தொடங்கியது. அடுத்த மாதம் (மே) 16ம் வரை இப்பயிற்சி முகாம் நடக்க இருக்கின்றது.

வி.ஐ.டி. துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன் இந்த சிறப்பு முகாமை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது: கடந்த 2004ம் ஆண்டு இந்த சிறப்பு விளையாட்டு பயிற்சி முகாம் தொடங்கப்பட்டது. உடல் ஆரோக்கியம் என்பது நம் அனைவருக்கும் மிக முக்கியமானது. அதை பேணிக்காப்பதில் முக்கியபங்கு விதிப்பது விளையாட்டு, கல்வி எப்படி ஒருவருக்கு முக்கியமோ, அதேபோல விளையாட்டும் முக்கியமானது.

வி.ஐ.டி யில் மட்டும் தான் கோடைக்கால முகாம் கடந்த 19 ஆண்டுகளாக இலவசமாக நடத்தப்படுகிறது. மாணவர்கள் அனைவரும் இந்த அறிய வாய்ப்பை பயன் படுத்திக்கொள்ள வேண்டுமென பேசினார். இப்பயிற்சி முகாமில் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, சதுரங்கம், வளைகோல் பந்து, கராத்தே, எறிபந்து, கையுந்து பந்து மற்றும் யோகாசனம் போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி முகாமில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளலாம். எந்தவித கட்டணமும் கிடையாது. சிறந்த அனுபவமிக்க பயிற்சியாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளிக்கின்றனர். தினமும் காலை 6.30 மணிக்கு பயிற்சி தொடங்குகிறது. பயிற்சியில் கலந்துகொள்ளும் மாணவ, மாணவிகளுக்காக காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்திலிருந்து இலவச பேருந்து வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## காஞ்சி வடக்கு இளைஞரணி திமுக சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா



பல்லாவரம் ஏப் 28

காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞரணி திமுக சார்பில் பல்லாவரம் தர்கா சாலையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பல்லாவரம் கோ. ஜானகிராமன் அவர்களின் தலைமையில் பொதுமக்களின் தாகம் தீர்க்கும் நீர் மோர் பந்தலை காஞ்சி வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், நுங்கு, மோர், ரோஸ் மில்க், பாதாம் மில்க், தர்பூசணி, கிர்ணி பழம், வெள்ளரிக்காய், ஆரஞ்சு பழம், வாழைப்பழம், திராட்சை, ஆகியவற்றையும் வழங்கினார் இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவரும் பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஎஸ்.சத்தியபிரபு, மாமன்ற உறுப்பினர் மங்கையர் திலகம் ராஜ்குமார், வட்ட கழக செயலாளர் பி.ராஜ் குமார் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் சரத் வெங்கடேசன், எஸ்.சாகுல் அமீது, மற்றும் பகுதி, மாவட்ட, மாநகர, நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

## அரசு வழங்கிய பஞ்சமி நிலங்களை மீட்டுத் தரக்கோரி தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முற்றுகையிட்டு போராட்டம்




தேனி. ஏப்.29

அரசு வழங்கிய பஞ்சமி நிலங்களை ஆக்கிரமிப்புக்காரர் பிடியிலிருந்து மீட்டுத் தரக்கோரி லோக் ஜனசக்தி கட்சி இந்து திராவிட மக்கள் கட்சி மதுரை மண்டல தலைவர் 50க்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

கலைஞர் ஆட்சி காலத்தில் கடந்த 23 ஆண்டுகளுக்கு முன்பாக உத்தமபாளையம் கோம்பை போடி உள்ளிட்ட பகுதிகளில் சாலையோரம் குடியிருப்போர் வீடு அற்றோருக்காக அரசால் வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் தற்பொழுது ஆக்கிரமிப்பு கார்கள் பிடியில் சிக்கிக் உள்ளதாகவும் அதனை மாவட்ட நிர்வாகம் கூறிய நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பு கார்கள் பிடியில் உள்ள அரசால் கடந்த 23 ஆண்டுகளுக்கு முன் கலைஞரால் வழங்கப்பட்ட இலவச காலிமனைகளை மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து தங்களுக்கு வழங்க வேண்டும் எனக் கூறி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 50க்கும் மேற்பட்டோர் அய்யனன் லோக் ஜனசக்தி கட்சி மற்றும் இந்து திராவிட மக்கள் கட்சி மதுரை மண்டல தலைவர் அபினேஷ்வரன் .முற்றிகை இட்டு போராட்டம் நடத்தினர் .







தேனி மாவட்டம் அல்லிநகரம் நாயுடு மகாஜன சங்கம் சார்பில் புதிய நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பதவியேற்பு விழா தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. தலைவர் கோவிந்தராஜ்,செயலாளர் செந்தில்குமார், பொருளாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக பொறுப்பேற்றனர்.புதிய நிர்வாகிகளுக்கு அல்லிநகரம் நாயுடு மகாஜன சங்கத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள்,சமுதாய பெரியோர்கள் மற்றும் உறவினர்கள் வாழ்த்தினர்.






கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவுப்படி காவல்துறை காவல் துணை கண்காணிப்பாளர் மகேஷ் குமார். மேற்பார்வையில் கன்னியாகுமரி போக்குவரத்து காவல்துறையினர் விபத்துகளை தடுக்கும் விதமாக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி ரவுண்டானா மற்றும் விவேகனந்தபுரம். பகுதிகளில் போக்குவரத்து விதிமுறைகளை முறையாக கடைப்பிடித்து ஹெல்மெட் அணிந்து வாகனம் ஓட்டும் வாகன ஓட்டிகளை ஊக்குவிக்கும் விதமாக கன்னியாகுமரி போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் ஜெயபிரகாஷ். தலைமையில் வாகன ஓட்டிகளுக்கு தர்பூசணி பழம் வழங்கப்பட்டது. மேலும் சாலை போக்குவரத்து விதிகள் குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டதுடன் ‘NO HELMET NO ENTRY’மற்றும் சாலை போக்குவரத்து பாதுகாப்பு. குறித்து விழிப்புணர்வு செய்யப்பட்டது.இந்த நிகழ்வு பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று ள்ளது.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161